**செய்தி வெளியீடு 658** **நாள் 11.12.2015**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க**

**சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 9 மாதம் நிறைவடைந்த குழந்தைகள் முதல் 15 வயதிற்குட்பட்ட நபர்களுக்கு தட்டம்மை தடுப்பூசி!**

**360 முகாம்களில் 5.58 லட்சம் குழந்தைகளுக்கு ஊசி போட இலக்கு!**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள 9 மாதம் நிறைவடைந்த குழந்தைகள் முதல் 15 வயதிற்குட்பட்ட நபர்களுக்கு தட்டம்மை தடுப்பூசி முகாமினை தொடங்க ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி சென்னை, ஷெனாய் நகர் பகுதியில் நடைபெறும் தட்டம்மை தடுப்பூசி முகாமினை இன்று (11.12.2015) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் பார்வையிட்டார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் மழையினால் குழந்தைகளுக்கு வரும் தட்டம்மை நோயை கட்டுப்படுத்தும் விதமாக சென்னையில் 186, காஞ்சிபுரத்தில் – 109, திருவள்ளூரில் 65 என மொத்தம் 360 முகாம்கள் நடத்தப்படுகின்றன. இம்முகாம்கள் மூலம் சுமார் 5.58 லட்சம் குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசி போடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்முகாம்களில் தட்டம்மை தடுப்பூசியானது இன்று முதல் இலக்கு முடியும் வரை தொடர்ந்து போடப்படும். தட்டம்மை தடுப்பூசியானது 9 மாதம் நிறைவடைந்த குழந்தைகள் முதல் 15 வயதிற்குட்பட்ட நபர்களுக்கு போடப்படும். மேற்கண்ட முகாம்களில் தங்களுடைய குழந்தைகளுக்கு தடுப்பூசி போட்டு பயன்பெறுமாறு மக்கள் நல்வாழ்வுத் துறையால் அறிவுறித்தப்படுகிறது. மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் இஆப., மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) திரு. கண்ணன் இஆப., பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி இணை இயக்குநர் திரு. சரவணன் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் தமிழக பிரதிநிதிகள் திரு. ஆசிஷ் சதாபதி, டாக்டர். சுரேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9